5. Applicants should carefully fill in the details in the On-Line Application at the appropriate places.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் அளிக்க வேண்டிய விவரங்களை மிகுந்த கவனத்துடன் உள்ளீடு செய்து விண்ணப்பத்தினை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6. Commission is not responsible for any data transmission loss.

தகவல் பரிமாற்றத்தின் போது ஏற்படும் குறைபாடுகளுக்கு தேர்வாணையம் பொறுப்பல்ல.

7. Any doubt in online application can be get clarified with the Commission’s GRC (1800 425 1002) or Commission’s office phone number: 044-25300 300.

இணையவழி விண்ணப்பம் குறித்து ஏதேனும் சந்தேகமிருந்தால் தேர்வாணையத்தின் குறைதீர்க்கும் மைய எண் 1800 425 1002ஐ அல்லது தேர்வாணைய அலுவலக தொலைபேசி எண் 044-25300 300 மூலமோ தொடர்பு கொண்டு தேவையான விளக்கம் பெறலாம்.

8. Hall Ticket can be downloaded from the Commission’s Website from a week before the commencement of Departmental Examinations till the last day examination in the month of May & December by presenting the unique online Application Number and Date of birth.

விண்ணப்பதாரர்கள் தங்களின் தனித்துவ விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை குறிப்பிட்டு தேர்வாணைய இணையதளத்தில் தங்களது நுழைவுச்சீட்டினை துறைத்தேர்வு தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பிலிருந்து கடைசி தேர்வு நாள் வரை முறையே மே மற்றும் டிசம்பர் மாத தேர்வுகளின்போது பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

9. Candidates coming without downloaded hall ticket will not be permitted to write the examination.

பதிவிறக்கம் செய்யப்பட்ட நுழைவுச்சீட்டு இல்லாமல் தேர்வுக்கூடத்திற்கு வரும் விண்ணப்பதாரர்கள் தேர்வெழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

